Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 66/2021**

**Deposition of PW.7 (LW.9)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகன் | ஜாதி | : | |
| த/பெ | : | பிச்சை | தொழில் | : | கிராம நிர்வாக அலுவலகத்தில் கிராம உதவியாளர் |
| கிராமம் | : | சீவல்சரகு | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 58/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.05.2026.

(1 முதல் 5 எதிரிகள் ஆஜர். 6து எதிரி PT Warrant மூலம் CC 70/2021 என்ற வழக்கில் நீதிமன்றத்தின் முன் ஆஜர் படுத்தப்பட்டுள்ளார்)

**முதல் விசாரணை தொடர்ச்சி**

இவ்வழக்கின் 1ம் எதிரி பாலாஜி எனது முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த எதிரியை பார்த்தால் என்னை அடையாளம் காண்பிக்க முடியும் என்று எனது முதல் விசாரணையில் சொல்லியிருந்தேன். தற்போது ஆஜராகியுள்ள 1ம் எதிரி பாலாஜியை எனக்கு தெரியாது. இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நீங்களும், உங்கள் அலுவலகத்தில் உள்ள கணேசன் என்பவரும் போலிசார் எப்போது அழைத்தாலும் காவல் நிலையம் செல்வீர்கள் என்றால் சரிதான். போலிசார் கையொப்பம் கேட்டால் போட்டுக்கொடுப்பீர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கின் எதிரிகளை உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் விசாரணையிலும் எதிரிகளை தெரியாது என்று தான் கூறியுள்ளீர்கள் என்றால் சரிதான்.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 66/2021**

**Deposition of PW.8 (LW.12)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மசியுள்ளா | ஜாதி | : | |
| த/பெ | : | முகமது வலியுள்ளா | தொழில் | : | மொபைல் கடை வைத்துள்ளேன். |
| கிராமம் | : | ஆத்தூர் | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 38/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.05.2026.

(1 முதல் 5 எதிரிகள் ஆஜர். 6து எதிரி PT Warrant மூலம் CC 70/2021 என்ற வழக்கில் நீதிமன்றத்தின் முன் ஆஜர் படுத்தப்பட்டுள்ளார்)

**முதல் விசாரணை**

நான் ஆத்தூரில் குடியிந்துகொண்டு மொபைல் கடை வைத்து நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளில் கரும்பாயிரம் (எ) மூர்த்தி என்பவரை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் எதிரி கரும்பாயிரம் (எ) மூர்த்தி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சியாக போடப்பட்டுள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் **(அ.சா.ஆ.4/PW.8)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கையெழுத்தை செம்பட்டி காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன். அந்த கையெழுத்தை ஆஜர் எதிரி கரும்பாயிரம் (எ) மூர்த்தி கடந்த 2021 ஆம் வருடம் ஒரு நாள் இரவு சுமார் 08.30 மணியளவில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் சாட்சியாக கையெழுத்து செய்தேன். என்னுடன் சேர்ந்து ராபர்ட் என்பவர் கையெழுத்து செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி கரும்பாயிரம் (எ) மூர்த்தி கன்னிவாடியில் இருந்து செம்பட்டிக்கு வரும் வழியில் இருசக்கர வாகனத்தில் வந்த நபரை அறுவாளால் வெட்டி அவர் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தை பறித்துக்கொண்டதாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அதேபோல் எதிரி கரும்பாயிரம் (எ) மூர்த்தி எடுத்து ஆஜர் செய்த புளூ நிறம் உள்ள இருசக்கர

வாகனத்தை என் முன்னிலையிலும், ராபர்ட் முன்னிலையிலும் சின்னாளபட்டி அருகில் சானியா என்ற பெண்ணில் தோட்டத்தில் வைத்து அவர் வெட்ட பயன்படுத்திய அறுவாளையும், புளூ கலர் இருசக்கர வாகனத்தையும் எதிரி கரும்பாயிரம் (எ) மூர்த்தி எடுத்துக் கொடுத்ததை எங்கள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்தார். அந்த அத்தாட்சியில் நானும், ராபர்ட் என்பவரும் கையெழுத்து செய்தோம். அந்த அத்தாட்சியில் உள்ள 2வது கையெழுத்து மட்டும் **(அ.சா.ஆ.5/PW.8)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கின் சொத்தான இருசக்கர வாகனம் ஏற்கனவே அ.சா.1 ன் மூலம் **அ.சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor